மாலை மலர்

MAALAI MALAR

திருச்சி 27-7-2025




# புகளூர் டி.என்.பி.எல் சார்பில் ரத்த தான முகாம்

வேலாயுதம்பாளையம், ஜுலை.27—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து ரத்த தான முகாமினை காகித நிறுவனத்தின் சிலப்பதிகாரம் அரங்கத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி ரத்த வங்கி மருத்துவர்கள் அறிவழகன், மோகனப்பிரியா ஆகியோர் முகாமினை துவக்கி வைத்தனர். முகாமில் ஆலைப் பணி யாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர். ஒப்பந்தப் பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர். முகாமில் மொத்தம் 172 நபர்கள் பங்கேற்று ரத்த தானம் செய்தனர். ரத்த தான முகாமில் பங்கேற்று ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாலை முரசு 27.07.2025




கரூரில்

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் இரத்ததான முகாம்

கரூர்,ஜூலை.27— தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து ரத்ததான முகாமனை காகித நிறுவனத்தின்சிலப்பதிகாரம் அரங்கத்தில் நடைபெற்றது. இம் முகாமின் துவக்க விழா வில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர் மனித வளம் சிவகுமார் செய்தொ ழில் சுகாதார மைய மருத்து வர் ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவர் அறிவ முகன், மோகனப்பிரியா ,ஆகியோர் முகாமினை துவக்கி வைத்தனர். கலந்து கொண்டு ரத்ததானம் செய்த வர்களுக்கு பல சாறு, குளுக் கோஸ் உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டன. முகாமில் ஆலை பணியாளர்கள் மற் றும் அவர்களது குடும்பத்தினர் ஒப்பந்த பணி யாளர்கள் தொழில் பழகு ணர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர். முகாமில் 172 நபர்கள் பங்கேற்று ரத்ததா னம் செய்தனர். முகாமில் பங் கேற்று ரத்ததானம் செய்தவர் களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

**காலைக்கதிர் (27.07.2025)**




■ புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில், ரத்த தான முகாம் நடந்தது.

# டி.என்.பி.எல்., நிறுவனத்தில் ரத்ததான சிறப்பு முகாம்

**கரூர், ஜூலை 27**

புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில், ரத்த தான முகாம் நடந்தது.

முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் தொடங்கி வைத்தார். ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன. ஆலை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுனர்கள், பொது மக்கள் என மொத்தம், 172 பேர் ரத்த தானம் செய்தனர். கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி சுகாதார மைய டாக்டர் ராஜா, ரத்த வங்கி டாக்டர்கள் அறிவழகன், மோகனப்பிரியா உள்பட பலர் பங்கேற்றனர்.

**தினமலர் (27.07.2025)**

# காகித ஆலையில் ரத்ததான முகாம்

**வேலாயுதம்பாளையம், ஜூலை 27–**

புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவை சார்பில் ரத்த தான முகாம் காகித ஆலை நிறுவன வளாகத்தில் நடந்தது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன முதன்மை மேலாளர் சிவக்குமார் தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்தார். செய்தொழில் சுகாதார மைய டாக்டர் ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி ரத்த வங்கி டாக்டர்கள் அறிவழகன், மோகனப்பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். காகித ஆலை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுனர்கள் மற்றும் பொதுமக்கள் ரத்த தானம் செய்தனர்.

**தினமணி (27.07.2025)**

# புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரத்த தான முகாம்




**ரத்த தான முகாமை சனிக்கிழமை தொடக்கிவைத்த டிஎன்பிஎல் ஆலையின் முதன்மை மேலாளர் கே.எஸ். சிவக்குமார். உடன் சுகாதார மைய மருத்துவர் ஏ.கே.கே. ராஜா உள்ளிட்டோர்.**

**கரூர், ஜூலை 26:** புகழூர் காகித ஆலை சார்பில் ரத்த தான முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

கரூர் மாவட்டம் புகழூர் காகித ஆலை மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கி சார்பில் காகித ஆலையின் சிலப்பதிகாரம் அரங்கில் நடைபெற்ற முகாமை ஆலையின் முதன்மை மேலாளர் (மனித வளம்) கே.எஸ்.சிவக்குமார் தலைமை வகித்து தொடக்கிவைத்தார். முகாமில் சுகாதார மைய மருத்துவர் ஏ.கே.கே. ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவர்கள் அறிவழகன், மோகனப்பிரியா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் ஆலைப் பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர், ஒப்பந்தப் பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட மொத்தம் 172 பேர் ரத்த தானம் செய்தனர். மேலும் அவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

தினகரன் (27.07.2025)

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை சார்பில் 172 பேர் ரத்ததானம்

வேலாயுதம்பாளையம், ஜூலை 27: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் சார்பில் ரத்த தான முகாமில் 172 பேர் ரத்ததானம் வழங்கினார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் சார்பில் ரத்த தர்ன முகாம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து இரத்த தான முகாமை காகித நிறுவனத்தின் அரங்கத்தில் நடைபெற்றது..

முகாம் துவக்க விழாவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ஏ.கே.கே. ராஜா ஆகியோர்




தொடங்கி வைத்தனர்.

கரூர் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி ரத்த வங்கி மருத்துவர்கள் அறிவழகன், மோகனப்பிரியா ஆகியோர் ரத்த தானம் செய்தனர். ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ். குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.

முகாமில் ஆலைப் பணியாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினர், ஒப்பந்தப் பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர். முகாமில் மொத்தம் 172 நபர்கள் பங்கேற்று ரத்த தானம் செய்தனர். ரத்த தான முகாமில் பங்கேற்று ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.